**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்................................................. மாவட்டம்........................................................

கிராமம்.......................................................... தந்தை /கணவர் பெயர்...........................................

தாலுக்கா......................................................... தொழில்................................................................

---

# Prob O.P. No. 146/2025

# 20.11.2025

**ம.த.சா. 2- திரு. ரமேஷ், த/பெ. யுகானந்தம்**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>முதல் விசாரணை</u>**

நான் சென்னையில் வசித்து வருகிறேன். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 2. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். துளசிங்கம் என்பவரை எனக்கு நன்கு தெரியும். அவர் எங்களது குடும்ப நண்பர். அவர் தற்போது உயிருடன் இல்லை. அவர் வாழ்நாளில் தனது சொத்துக்களை பொறுத்து கபிலராஜனுக்கு 18/06/2016 அன்று ஒரு உயில் எழுதினார். அப்பொழுது நான் அவருடன் இருந்தேன். அவர் உயிலில் கையொப்பம் போட்டதை நான் பார்த்தேன். அந்த உயிலில் நானும் நந்திவர்மன், செல்வகுமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் உயிலில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 18/06/2016 தேதியிட்ட உயிலில் இரண்டாவதாக உள்ள எனது சாட்சி கையெழுத்து மட்டும் **மதசா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) **ம.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.